**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, நாகப்பட்டினம்</u>**

முன்னிலை : திரு.ஜே. ஆன்ஸ் ராஜா, B.A., B.L.,

உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருக்குவளை.

நீதித்துறை நடுவர் எண்.1, நாகப்பட்டினம்( மு.கூ.பொ)

**2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 02 ம் நாள், வியாழக்கிழமை**

**<u>குற்றபல்வகை மனு எண்.456/2026</u>**

வில்சன், 60/2026

த/பெ. தேவன்,

22, மரவாடி ரோடு,

வேதநாயகம் செட்டி தெரு,

நாகப்பட்டினம். …மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர்

/எதிர்/

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

நகர காவல்நிலையம்,

நாகப்பட்டினம்.

குற்ற எண்.169/2026

ச/பி.331(4) மற்றும் 305 BNSS …எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

இம்மனுவானது 02.07.2026 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர்/உடமையாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. வீரபாண்டியன்அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் நாகப்பட்டினம், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்…

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவில் மனுதாரர்/ நிகழ்நிலை புகார்தாரர் ஆவார். மனுதாரர் கடந்த 20.06.2026 ம் தேதியன்று சுமார் 11.00 மணியளவில் கடந்த 20.06.2026 தேதி இரவு

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 18:13:10 +0530

சுமார் 11 மணிக்கு தனது வீட்டின் மாடியில உள்ள வீட்டில் இரவு கீழ் வீட்டின் மெயின் கதவை பூட்டி விட்டு தூங்க சென்றுவிட்டதாகவும், தனது மகன் நெல்சன் என்பவர் கிரிகேட் விளையாட சென்று விட்டார். தனது மனைவி லீனா கடந்த 21.06.2026 தேதியன்று காலை சுமார் 05.00 மணிக்கு தனது மனைவி மேல் வீட்டில் இருந்து சாவியை எடுத்துக்கொண்டு கீழ் வீட்டிற்கு வந்து முன் கதவை திறந்து வீட்டிற்குள் சென்று கோவிலுக்கு செல்வதற்காக வீட்டில் உள்ள ரூமில் புடவை கட்டுவதற்காக சென்ற பொழுது பீரோவின் அருகில் தங்க கை செயின் வைத்திருந்த பாக்ஸ் கீழே கிடந்துள்ளதாகவும், அப்போது பீரோ கதவு மூடிய நிலையில் இருந்ததாகவும் அந்த இரும்பு பீரோவை திறந்து பார்த்த பொழுது லாக்கரில் வைத்திருந்த ரூ. 5,45,000 மும் மற்றும் சுமார் 13 பவுன் நகைகளை காணவில்லை யாரோ தனது நகை திருடியருப்பது தெரியவந்ததாகவும், இது சம்மந்தமாக எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் வழக்குபதிவு செய்யப்பட்டு தொடர் விசாரணை மேற்கொண்டு, எதிரியிடமிருந்து 13 பவுன் நகைகள் கைப்பற்றப்பட்டு தற்சமயம் எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் வைத்துள்ளனர்.

2. மேற்படி தங்க நகைகள் மற்றும் தனது சொந்த பயன்பாட்டிற்காக தேவைப்படுவதாகவும், மேற்கண்ட நகைகள் காவல் நிலையத்தில் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டால் அது பழுதாகி சேதமாகிவிடும் எனவும், அதன் மதிப்பும் குறைந்துவிடும் எனவும், அதனை பின்னிட்டு உபயோகப்படுத்த முடியாத நிலை ஏற்படும் எனவும், அதனால் தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் எனவும், ஆகையால் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் இருந்து வரும் தங்க நகைகள் மற்றும் ரொக்கம் பணத்தையும் இந்த வழக்கு முடியும் முன்பாக இடைக்காலமாக திரும்ப வழங்கிட உத்தரவிடவேண்டியும், நகைகளை திரும்ப இடைக்காலமாக பெறும் பட்சத்தில் அதனை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தப்படாமல் சேதமோ, உருமாற்றமோ செய்யமாட்டேன் என்று கேட்டு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர் தரப்பில் மேற்படி நகைகளை மனுதாரர் வசம் ஒப்படைப்பதில் ஆட்சேபனை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 18:13:18 +0530

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5. இவ்வழக்கில் மனுதாரருக்கு சொந்தமான தங்க நகைகள் 13 பவுன் எடை கொண்ட எதிர்மனுதாரர் கைப்பற்றி நிலுவையில் உள்ள இவ்வழக்கின் தொடர்புடைய நகைகளை பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டால் அது பழுதாகி சேதமாகிவிடும் எனவும், அதன் மதிப்பும் குறைந்துவிடும் எனவும், அதனை பின்னிட்டு உபயோகப்படுத்த முடியாத நிலை ஏற்படும் எனவும், அதனால் தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் எனவும், எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி நகைகளை மனுதாரர் வசம் ஒப்படைப்பதில் ஆட்சேபனை இல்லை என தெரிவிக்கபட்டும், மேற்படி வழக்கு சொத்தை இடைக்கால பொறுப்பில் கொடுத்தால் அதனை விற்கவோ, அடமானம் வைக்கவோ, உருமாற்றம் செய்யவோ மாட்டேன் என்றும், நீதிமன்றம் கோரும் போது நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாகவும் கூறியுள்ளதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

1. மனுதாரருக்கு வழக்கு சொத்தை பொறுத்து ரூ.15,00,000/-த்திற்கான சொந்த பிணைப்பத்திரம் எழுதி தரவேண்டும் என்றும், தனிநபர் இருவர் ரூ.10,000/- தொகைக்கு பிணைப்பத்திரமும் எழுதி தரவேண்டும் என்றும்,
2. மனுதாரர் மேற்படி வழக்கு சொத்தை விற்பனையோ அல்லது உருமாற்றம் செய்யவோ, நிறமாற்றம் செய்யவோ கூடாது என்றும்,
3. மனுதாரர் வழக்கு சொத்தை இரண்டு புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும்,
4. மனுதாரர் வழக்கு சொத்தை இந்நீதிமன்றம் கேட்கும்போதோ, விசாரணை காலத்தில் விசாரணையின்போதோ, அவசியம் என கருதும் நேரங்களில் ஒப்படைக்க வேண்டும் என்றும்,
5. தலைமை எழுத்தர் மூலம் பஞ்சநாமா தயார் செய்யவும்,

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 02-ம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 18:13:26 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

நாகப்பட்டினம் (மு.கூ.பொ)